**CC.No.** 54/2025

**Date**: 09.04.2026

**ம.சா. 1. சோலச்சி க/பெ. காளிதாஸ், பள்ளத்தூர்.**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) **இந்த வழக்கை தாக்கல் செய்ய எதிரியின் மகனும் என்னுடைய கனவருமான காளிதாஸ் துணையாக இருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார்தான் வழக்குதாக்கல் செய்தார். இந்த வழக்கு தாக்கல் செய்தது சம்பந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அப்பா எந்த ஊரில் சென்று வழக்கறிஞரை சந்தித்து இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் மதுரை வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கறிஞரிடம் என்ன என்ன ஆவணங்கள் என் அப்பா கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மதுரைக்கும் என் அப்பாவிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றாலும் என் கணவரின் தூண்டுதலின் பேரில்தான் மதுரை சென்று என் அப்பா வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. என் கணவர் அவர் அப்பாவிடம் அவரது அம்மா மற்றும் சகோதரியின் நகைகளை பெற்று வந்துதான் தனியாக காரைக்குடியில் கம்யூட்டர் சென்டர் ஆரம்பித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.**

2) **எந்த மூலதனத்தை வைத்து கம்யூட்டர் சென்டர் ஆரம்பித்தார் என்றாலும் அவரது வருமானம் என்ன என்பது பற்றியும் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு முன்பு கம்யூட்டர் சென்டர் ஆரம்பித்துவிட்டார் அதனால் அவரது வருமானம் பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் திருத்தப்பட்ட மனு 12.02.2026 ல் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவில் சொல்லியுள்ள 7 ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணத்தை பற்றியும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மனுவில் உள்ள சாட்சி பட்டியலில் உள்ள நபர்களை யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என் அப்பா உயிருடன் இருந்தபோது**

மதுரை வழக்கறிஞரிம் சொன்னது என்றால் சரிதான். மேற்படி மனுவில் என் அப்பா எதிரியின் மகளின் நிச்சயதார்த்ததிற்கும், திருமணத்திற்கும் பணம் பெற்றுக்கொண்டார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனு பாரா– 2 ல், 16.10.2023 ம் தேதி ரூ. 1 லட்சத்து 70 ஆயிரம் பெற்றுக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ள விபரத்திற்கு ஆதரவாக என்ன ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

3) கடந்த 17.10.2023 ல் எதிரியிடம் ரூ. 5 லட்சத்து 50 ஆயிரம் என் அப்பா கொடுத்தற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வங்கி கணக்கு மூலம் எதிரிக்கு பணம் அளித்தற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு பட்டியல் மற்றும் நகை அடகு ரசீதுகள் மற்றும் சிட்பண்ட் புக் கொடுத்துள்ளேன். என் மாமனாருக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் அதுபற்றி அந்த சமயம் எனக்கு தெரியாது. எதிரி கொடுத்த வங்கி கணக்கில் பணத்தை செலுத்தினேன். எதிரியின் வங்கி கணக்கிற்கு நான் நேரடியாக பணம் செலுத்தினேனா என்றால் இல்லை. அவரது மகள் மற்றும் உறவினரின் வங்கி கணக்கில் பணம் செலுத்தினேன். ம.சா.ஆ. 11 ல் எதிரிக்கு பணம் செலுத்தியதாக எந்த தகவலும் இல்லை என்று சொன்னால் சரிதான். எ.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ளது போல் கடந்த 16.10.2023 அன்று நகையை அடமானம் வைத்தோ, அல்லது ஏலச்சீட்டு மூலமாகவோ ரூ. 7 லட்சத்து 20 ஆயிரத்தை தயார் செய்து எதிரிக்கு அளித்தமைக்கு எவ்வித ஆவணமும் முன்னிடப்படவில்லை என்றால் சரியல்ல.

4) மேற்படி தேதியன்று எதிரிக்கு பணம் கொடுத்தற்கு கடனுறுதிசீட்டோ அல்லது வேறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேலும் அவரது வீட்டை ஒத்திக்கு வைத்து அதன் மூலம் வரும் பணத்தில் கடனை திருப்பி தருவதாக என்னிடமும் என் தகப்பனாரிடமும் எதிரி மேற்படி தேதியில் சொன்னார். என் தகப்பனாருக்கு 2 மகள்கள் என்றால் சரிதான். என் சகோதரி பெயர் சித்ரா தேவி என்றால் சரிதான். மேற்படி திருத்தப்பட்ட மனுவில் என்

அம்மா, என் சகோதரர், மற்றும் என் சகோதரி பெயர் எதுவும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 16.10.2023ல் ரூ. 1 லட்சத்து 70 ஆயிரம் எங்கு வைத்து யார் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டது என்ற விரம் மேற்படி மனுவில் இல்லை என்றால் சரிதான். அதே போல் 17.10.2023ல் ரூ. 5 லட்சத்து 50 ஆயிரம் எங்கு வைத்து யார் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டது என்ற விரம் மேற்படி மனுவில் இல்லை என்றால் சரிதான்.

5) ம.சா.ஆ 11ல் யார் யாருக்கு எவ்வளவு பணம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தில ரூ. 45 ஆயிரம் எதிரியின் மகள் நாகலெட்சுமி என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூ. 1 லட்சம் அவரது உறவினருக்கும் (அவரது பெயர் தற்போது நினைவில்லை) அனுப்பப்பட்டுள்ளது. ரூ. 2 லட்சத்து 30 ஆயிரம் ஏலச்சீட்டு அடமானம் வைத்து ரொக்கமாக கையில் கொடுத்தோம். ரூ.1 லட்சத்து 75 ஆயிரம் நகை அடமான வைத்து கையில் ரொக்கமாக கொடுத்தோம். மேற்படி விபரத்தை எனது புகார் மனுவிலோ, எ.ம.சா.ஆ.1–லோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே போல் என் தகப்பனார் தாக்கல் செய்த புகார் மனுவிலோ, அல்லது நான் தாக்கல் செய்த திருத்தப்பட்ட புகார் மனுவிலோ மேற்படி விபரம் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் திருத்தப்பட்ட புகாரில் மேற்படி விரபம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ரூ.45 ஆயிரம் எதிரியின் மகள் நாகலெட்சுமி என்பவருக்கு அனுப்பப்பட்டது என்ற விபரம் புகாரிலோ, அல்லது திருத்தப்பட்ட புகாரிலோ இல்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.09 17:56:28 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)